# CHALLENGES FACED BY SCHOOL STUDENTS IN GAINING EDUCATION: (RESEARCH BASED ON SAMBUNAGAR AND AALANGULAM AREAS)

**SMF Nuskiya (1), MNF Nisrin (2), MSP Sabrina (3), MSM Begam (4)**

[1,2,3&4] Department of Arabic Language, Faculty of Islamic Studies and Arabic Language, South Eastern University of Sri Lanka

nuskiyanawfer@gmail.com, nisrin9295@gmail.com, fathimasabrina1994@gmail.com, majidhabegam7@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

கல்வி என்பது மனித வாழ்வில் இன்றியமையாத ஒரு பகுதியாகும். அது ஒரு சமூகத்தின் எழுச்சிக்கு பாரிய பங்கு வகிக்கிறது. கல்வியில் பின் தங்கிய ஒரு சமூகம் எல்லாவற்றிலும் பின்னடைந்தே இருக்கும். அந்த வகையில் எமது ஆய்வுப்பிரதேசமான ஆலங்குலம் மற்றும் சம்புநகர் கிராமங்கள் கல்வியில் மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்படும் இரு கிராமங்களாகும். இங்கு கல்வியைத்தொடர ஆர்வமுள்ள பல மாணவர்கள் இருந்தாலும் அவர்களுக்கு கல்வியைத்தொடர போதிய வளங்கள் காணப்படாமையும் பொருளாதாரமும் பாரிய சவால்களாக காணப்படுகின்றது. கற்கும் வயதிலள்ள அதிகமான மாணவர்கள் தமது கல்வியை இடைநிறுத்தி உள்ளனர். ஆதனடிப்படையில் பின்தங்கிய நிலையில் காணப்படும் இக்கிராமங்களின் கல்வி மேன்பாட்டிற்கான ஆலோசனைகளும் பரிந்துரைகளும் இவ்வாய்வின் மூலம் முன்வைக்கப்பட்டுள்ளன. பண்புரீதியானதாகக் காணப்படும் இவ்வாய்வின் முடிவுகளுக்காக முதலாம் நிலைத் தரவுகளான வினாக்கொத்து, நேர்காணல் மற்றும் மறைமுக உரையாடல் என்பவற்றை மையமாகக் கொண்டு பெறப்பட்ட தரவுகளைப் பகுப்பாய்வு செய்வதற்காக Microsoft Excel மென்பொருள் பயன்படுத்தப்பட்டுள்ளது.

**திறவுச் சொற்கள்-** கல்வி, மாணவர்கள், சம்புநகர ஆலங்குலம்.

## அறிமுகம்

கல்வி என்பது மனித வாழ்வில் மிக முக்கியமான ஒரு விடயமாகும். கல்வியின் மூலம் மனிதனது அறிவு, உடல், ஆன்மா என்பவை பன்படுகின்றன. கல்வியானது ஒரு சமூகம் வெற்றி பெற வழிகாட்டும் ஒரு கருவி. மேலும் ஓரு சமூகத்தின் வளர்ச்சியினை அளக்க பயன்படும் அளவுகோலாகும். அறிவின் எல்லைகளை விரிவுபடுத்தி அதனை அமுல்ப்படுத்துவதில் அதன் வளர்ச்சியை துாண்டக் கூடிய ஒரு விடயமாக கல்வி திகழ்கின்றது. ''பிள்ளைகளுக்குறிய சூழலையும் அங்கு வாழ்வதற்கு உதவும் அனுபவங்களையும் பெற்றுக் கொடுத்தல் கல்வியாகும்''(ஜோன் டுயி). மேலும் ''ஒரு தனியாளின் வாழ்க்கையில் நடத்தை, சிந்தனை, மனப்பாங்கு என்பவற்றில் நிறந்தரமான மாற்றத்தை ஏற்படுத்தும் சூழல் செல்வாக்கே கல்வி''(தொம்ஸன்)

ஊலகளாவிய ரீதியில் கல்வி என்பது எல்லா மனிதர்களுக்குமான உரிமையாகும்.அபிவிருத்தியடைந்து வரும் எல்லாத் துறைகளிலும் கல்வியின் செல்வாக்கு இன்றியமையாதது.இதனாலேயே அபிவிருத்தியடைந்த நாடுகளிலும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளிலும் கல்வி வளர்ச்சிக்கான

பாரிய முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.எமது நாட்டிலும் அரச பாடசாலைகள்,தனியார் பாடசாலைகள் என இன்னோரன்ன முறைகளில் கல்வி புகட்டப்படுகின்றது

பலர் கல்வியின் முக்கியத்துவத்தைப்பற்றி பேசியிருந்த போதிலும் சில பிரதேசங்கள் மற்றும் கிராமங்களில் கல்வியில் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே உள்ளது. ஓர் கிராமம் அடிப்படை வசதிகள் ஏதும் இன்றி பின்தங்கிய நிலையில் இருக்குமாயின் அங்கு கல்வி அறிவும் பின்னடைவைக் காட்டும். பின்தங்கிய கல்வி நிலை எனும்போது அங்கு ஒழுங்கான கல்வியைப் போதிக்கும் சிறந்த வளங்கள் காணப்படாமையே முக்கிய காரணமாகும். எமது ஆய்வுப் பிரதேசங்களைப் பொருத்தவரை கல்வி வளர்ச்சியில் மிகவும் பின்னடைவைக்காட்டும் பிரதேசங்களாகும்.

அம்பாறை மாவட்டத்தில் 48808 மக்கள் வாழ்கின்ற அட்டாளச்சேனை பிரதேச சபை 94.495$KM^2$ பரப்பைக் கொண்டது. இதில் 17 பிரிவுகள் காணப்படுகின்றது. ஆலங்குலம் கிராமமானது அட்டாளச்சேனை 15 ஆம் பிரிவைச் சேர்ந்ததாகும். இங்கு 1738 மக்கள் சனத்தொகையைக் கொண்ட 488 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. மேலும் இங்கு இடை நிலை கல்வியை போதிக்கின்ற கரடிக்குளம் ரஹ்மானியா பாடசாலை காணப்படுகின்றது.

அட்டாளச்சேனை 05 ஆம் பிரிவில் 306 குடும்பங்கள் வாழக்கூடிய சம்புநகர்இ முல்லைத்தீவு, புறத்தோட்டம் 3 கிராமங்களும் உள்ளடங்குகின்றன. இதில் சம்புநகர் 225 ச னத்தொகை கொண்ட 75 முடும்பங்கள் வாழும் ஓர் சிறிய கிராமமாகும். சுமார் 65 வாக்காளர்கள் இங்கு காணப்படுகின்றனர். மேலும் இங்கு ஆரம்பக்கல்வியை கற்பிக்கக் கூடிய அல்-மினா பாடசாலை மாத்திரமே காணப்படுகின்றது.

இக் கிராமங்களில் கல்வி கற்கும் வயதில் காணப்படுகின்றன மாணவர்களுள் பெரும்பான்மையினர் பாடசாலைக் கல்வியை இடைநிறுத்தியவர்கள். வெகுசிலரே உயர் கல்வியை தொடர்கின்றனர். அந்தவகையில் இவ்வாய்வு இப்பிரதேச மாணவர்களின் கல்வி பின்னடைவிற்கான காரணங்களை கண்டறிய வேண்டுகிறது.

**ஆய்வின் நோக்கம்**

இவ்வாய்வு இரண்டு பிரதான நோக்கங்களைக் கொண்டதாக உள்ளது. ஒன்று கல்வியில் மாணவர்களின் ஈடுபாட்டை கண்டறிதல். இரண்டாவது, கல்வியைத் தொடர்வதில் மாணவர்கள் எதிர்நோக்கும் சவால்களை இணங்காணல்

**ஆய்வு வினாக்கள்**

1) ஆலங்குலம் மற்றும் சம்புநகர் பிரதேசங்களில் பாடசாலை மாணவர்களின் கல்வித்தரம் எவ்வாறு காணப்படுகின்றது?
2) இப்பிரதேசங்களில் கல்வியைத் தொடர்வதில் மாணவர்கள் எதிர்நோக்கும் சவால்கள் எவை?
3) மாணவர்களுக்கு கல்வியை வழங்குவதில் பாடசாலை மற்றும் ஆசிரியர்களின் பங்களிப்பு எவ்வாறு காணப்படுகின்றது?

**ஆய்வுப் பிரச்சினை**

அம்பாறை மாவட்டம் அட்டாளச்சேனை பிரதேச சபைக்கு உட்பட்ட சம்புநகர் மற்றும் ஆலங்குலம் பிரதேசங்கள் அடிப்படை வசதிகளற்ற மிகவும் வரிய கிராமங்களாகும். இப்பிரதேச மக்களின் கல்வி

நிலை மிகவும் பின்னடைந்து காணப்படுவதுடன் இவர்கள் கல்வியைத் தொடர்வதில் பல சிக்கல்களையும் சவால்களையும் எதிர்நோக்குகின்றனர்

**இலக்கிய மீளாய்வு**

எஸ்.எச்.எம் ஜெமீல் எழுதிய இஸ்லாமிய கல்வி என்ற நூலில் கல்வியின் முக்கியத்துவம் கல்விச் சிந்தனைகள் மற்றும் கல்வி முறைகள் போன்றன பற்றி ஆராயப்பட்டுள்ளது.

ரவுப் ஸய்ன் எழுதிய இலங்கை முஸ்லிங்களின் கல்வி சவால்களும் முன்மொழிவுகளும் என்ற நூலில் இலய்கை முஸ்லிங்களின் பாடசாலைக் கல்வி, அஹதயைா கல்வி,சிங்கள மொழி மூலக் கல்வி மற்றும் முஸ்லிங்களின் ஆங்கிலக் கல்வி தொடர்பாக விளக்கப்பட்டுள்ளன.

எனபீஎம் சைபுதீன் மற்றும் ஹஸ்புல்லாஹ் போன்றோரினால் முன்வைக்கப்பட்டுள்ள உயர்கல்வியில் முஸ்லிம்கள்: ஒரு பின்னனி அறிக்கை என்ற ஆய்வில் உயர்கல்வியில் முஸ்லிம்களின் ஈடுபாடு பற்றியும் பங்களிப்புகள் பற்றியும் ஆராயப்பட்டுள்ளது.

யாழ் பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளரான மா.சின்னத்தம்பி அவர்களினது 2008ம் ஆண்டு பதிப்பிடப்பட்டு அச்சிடப்பட்ட ‘‘பாடசாலையும் சமூகமும்’’ என்ற நூலில் பெற்றோர் சமூகமும் பாடசாலையும் என்ற அத்தியாயத்தில் ‘‘பாடசாலை முன்னேற்ற நடவடிக்கைகளில் பெற்றோர் பங்கேற்கும் சந்தர்ப்பங்களிலேயே சாத்தியமாகிறது’’என்று குறிப்பிடுகின்றார்.

Iencks அவரது (1972)ம் ஆண்டின் ஆய்வின் அடிப்படையில் ‘‘குடும்பப் புலமே கல்வி தொடர்பான பெறுபேறுகளை தீர்மானிக்கும் முக்கிய காரணி ’’ என சுட்டிக்காட்டியுள்ளார்.

2005ம் ஆண்டு பதிப்பிடப்பட்டு அச்சிடப்பட்ட பிரதிபா அவர்களுடைய ‘‘இன்றைய கல்வி எதிர்கொள்ளும் சவால்கள்’’ என்ற நூலில் ஏழைகளுக்கு எட்டாத கல்விக்கனி என்ற அத்தியாயத்தில் அவர் குறிப்பிடும் போது ‘‘ஏழைக் குடும்பத்தை சேர்ந்தவர்கள் என்றால், அவர்கள் ஆண்களாக இருந்தாலும் பெண்களாக இருந்தாலும் கல்வி என்பது எட்டாக் கனியாகவே இருந்திக்கிறது. என்று குறிப்பிடுகின்றார்.

வடமராடசி பிரதேசத்தின் கல்வி நிலையில் சமூகப் பொருளாதார காரணிகளின் வகிபங்கு குறித்து ஆராய்ச்சி செய்த யாழ்ப்பாண பல்கலைக் கழக மாணவர்களான ‘‘தேனச’’ மற்றும் ‘‘உதய குமார’’ தங்களின் ஆய்வு முடிவில் ‘‘கல்வி நிலையில் சமூகப் பொருளாதார காரணிகள் அதிகம் தாக்கம் புகுவது ஆய்வு ரீதியாக கண்டறியப்பட்டது’’ எனக் கூறுகின்றனர்.


**ஆய்வு முறையியல்**

இவ்வாய்வானது முதலாம், இரண்டாம்நிலைத் தரவுகளைப் பயன்படுத்தினாலும் முதலாம் நிலைத்தரவுகளையே மையப்படுத்தியதாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. முதலாம் நிலைத் தரவுகளான ஒழுங்கமைக்கப்பட்ட வினாக் கொத்து மற்றும் மறைமுக உரையாடல் முதலிய முறைகளுடன் இரண்டாம் நிலைத்தரவுகளாக ஆய்வுக்கட்டுரைகள், சஞ்சிகைகள், இணையத்தளங்கள் என்பனவும் பயன்படுத்தப்பட்டுள்ளன. பெறப்பட்ட தரவுகளை பகுப்பாய்வு செய்வதற்காக Microsoft Excel பயன்படுத்தப்பட்டுள்ளது.

**கலந்துரையாடலும் முடிவுகளும்**


குறிப்பிட்ட ஆய்வுபபிரதேசங்களான சம்புநகர் மற்றும் ஆலங்குலம் அடிப்படை வசதிகளற்ற மிகவும் வரிய கிராமங்களாகும். இப்பிரதேச மக்களின் கல்வி நிலை மற்றும் அவர்கள் கல்வியைத் தொடர்வதில் எதிர்நோக்கும் சவால்களை கண்டறியும் நோக்கில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்படி பின்வரும் தரவுகள் பெறப்பட்டன. இக்கிராமங்களில் சுமார் 500 குடும்பங்கள் காணப்படுகின்றன. இக்குடும்பங்களில் 30 குடும்பங்கள் எமது ஆய்விற்கு உற்படுத்தப்பட்டது. இக்குடும்ப அங்கத்தவர்களிடமிருந்து வினாக்கொத்துக்கள் மூலமும் நேர்காணல் மூலமும் தகவல் திரட்டப்பட்டன.

ஒரு பிரதேசத்தைப் பொருத்த வரையில் மாணவர்களுக்கு கல்வியை வழங்குவதில் பாடசாலைகளே பெரிதும் பங்களிப்பு செய்கின்றன. அந்த வகையில் ஆலங்குலம் மற்றும் சம்புநகர் பிரதேசங்களில் காணப்படும் பாடசாலைகளில் கல்வியைத் தொடர்வதற்கான போதிய வளங்கள் காணப்படுகின்றனவா என தொடுக்கப்பட்ட வினாக்களுக்கு அமைய கிடைக்கப்பெற்ற பெறுபேறுகள் பின்வருமாறு,





மேற்குறிப்பிட்ட உருவுக்கு அமைய இப்பிரதேசங்களின் பின்னடைவிற்கு பாடசாலைகளின் வளங்கள் பற்றாக்குறையும் ஒரு பாரிய பங்களிப்பு செலுத்துவதை கண்டறிய முடிகிறது. சும்புநகர் பிரதேச பாடசாலையைப் பொருத்தவரையில் 1-5 ஆம் ஆண்டு மாத்திரமே கல்வி பயில முடிகிறது. மேலும், ஆலங்குலத்தில் சாதாரண தரம் வரை மட்டுமே காணப்படுகின்றது. எனவே, இப்பிரதேசங்களில் கல்வியை மேற்கொள்வது கடினமாக காணப்படுகின்றது. அத்தோடு இப்பாடசாலைகளில் முறையாக கல்வி கற்பதற்கான சூழலின்மை மற்றும் போதிய அளவு கட்டிடங்களும் தளபாடங்களின்மையும் கல்வியைத் தொடர்வதில் செல்வாக்கு செலுத்துகிறது. அடுத்த முக்கிய காரணங்களாக ஆசிரியர் பற்றாக்குறை, பிரத்தியோக வகுப்புக்கள் போதாமை மற்றும் நூலக வசதிகள் போதாமையும் இனங்காணப்பட்டது.

இக்கிராம மக்கள் கல்வியில் பின்னடைந்து காணப்படுவதற்கு அவர்கள் எகிர்நோக்கும் சவால்களும் ஒரு முக்கிய காரணமாக கண்டறியப்பட்டது. இங்குள்ள பெற்றோர்கள் மற்றும் மாணவர்கள் மத்தியில் கற்பதற்கான ஆர்வம், ஆசை, தேவை இருந்தாலும் கூட அவர்களால் கல்வியைத் தொடர முடிவதில்லை. இதனடிப்படையில் வறுமை, இளவயதுத் திருமணம், பாடசாலையில் வளங்கள் பற்றாக்குறை, போக்குவரத்து வசதிகளின்மை, ஆர்வமின்மை, பெண் மாணவர்களை கல்வி கற்க விடுவதில் தயக்கம், பாடசாலை நிருவாகத்தினரின் ஊக்குவிப்பின்மை, குடும்பப்பிரச்சினை, சுகயீனம், கல்வியின் முக்கியத்துவத்தை உணராமை மற்றும் கல்வி அறிவின்மை போன்றன இப்பிரதேங்களில் மாணவர்கள் கல்வியைத் தொடர்வதில் முகங்கொடுக்கும் சவால்களாகும்.




வறுமை மற்றும் போக்குவரத்து வசதிகளின்மை என்பன இப்பிரதேச மக்கள் கல்வியைத் தொடர்வதில் அதிகம் செல்வாக்கு செலுத்தக்கூடிய சவால்களாக இவ்வுருவின் மூலம் கண்டறிய முடிகிறது.

இக்கிராமங்களிலுள்ள பாடசாலைகளில் போதிய வசதிகளும் வளங்களும் காணப்படாமை காரணமாக சில பொருளாதார வசதியுடைய மாணவர்கள் மாத்திரம் கல்வியைத் தொடர்வதற்காக அண்மையிலுள்ள நகர்புர பாடசாலைகளுக்கு செல்லும் ஒரு வழக்கமும் காணப்படுகின்றது. இது தொடர்பாக எமது ஆய்வுக்குறப்படுத்தப்பட்டவர்களிடம் வினவிய போது பெறப்பட்ட தரவுகளின்படி





இவ்வுருவை நோக்கும்போது இகிராம மாணவர்களில் அதகைமானோர் பொருளாதார குறைபாடு காரணமாக கல்வியைத்தொடர முடியாமல் இருப்பதை அறிய முடிகிறது.

தற்காலத்தை பொருத்தவரை பாடசாலைக்கல்வி தவிர்ந்து மேலதிக பிரத்தியேக வகுப்புக்கள் மாணவர்களின் கல்வி மேன்பாட்டில் பாரிய பங்களிப்பு செலுத்துகின்றது. ஆயினும் இப்பிரதேசத்தில் தனியார் பிரத்தியேக வகுப்புக்கள் ஏதும் நடைபெறுவதில்லை. அத்தோடு கட்டணம் செலுத்தி பாடசாலையில் மாலைநேர வகுப்புக்கள் மாத்திரமே இடம்பெறுகின்றமையும் தெரிய வந்தது.

பிள்ளைகளின் கல்வி மேன்பாட்டில் பெற்றோர்களின் பங்களிப்பு மற்றும் ஊக்கம் அலப்பெரியது. சம்புநகர் மற்றும் ஆலங்குலம் பிரதேசங்களில் மாணவர்கள் கல்வியில் பின்னடைந்து காணப்படுவதற்கு அவர்களின் பெற்றோரிடத்தில் கல்வியறிவின்மை முக்கிய காரணமாக ஆய்வின்மூலம் தெளிவாக காண முடிந்தது.

அதனடிப்படையில் இம்மாணவர்களின் பெற்றோர்களின் கல்வி தரத்தை ஆராய்ந்த போது அவர்களும் கல்வி தரத்தில் பின்தங்கியவர்களாக இருக்கின்றமை நிரூபனமாகியது.




**முடிவுரை**

ஆய்வுப்பிரதேசமான சம்புநகர் மற்றும் ஆலங்குலம் கிராமங்களைப் பொருத்தவரையில் அங்கு காணப்படும் கல்வி நிலை பற்றிய ஆய்வில் கிடைத்த முடிவின்படி சிறந்த கல்வியை பெறக்கூடிய வளங்கள் மிகவும் அறிதாக காணப்படுகின்றது. மேலும் வெளிப்பிரதேசங்களுக்கு சென்று அவர்களுடைய கல்வியைத் தொடர்வதற்கு பொருளாதாரம் மற்றும் போக்குவரத்து வசதிகள் பெருந்தடையாக காணப்படுகின்றன. எனவே இவர்களுக்கு முறையான கல்வியைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வளங்களை அளிப்பதன் மூலம் இப்பகுதியை கல்வி வளர்ச்சியில் முன்னேற்ற முடியும்.

**ஆலோசனைகளும் பரிந்துரைகளும்**

- இப்பிரதேச வாழ் பெற்றோர்களுக்கு கல்வியின் முக்கியத்துவம் பற்றி விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல்
- கல்வியில் ஆர்வமுள்ள பிள்ளைகளை இணங்கண்டு அவர்களுக்கு புலமைப்பரிசில்களை வழங்கி கல்வியைத் தொடர்வதற்கு வழிகளை அமைத்துக் கொடுத்தல்.
- அப்பிரதேசத்தில் உள்ள பாடசாலைகளின் வளங்களை அதிகரித்து உயர்தர கல்வியையும் அதே பாடசாலையில் கற்பதற்கான ஏற்பாடுகளை செய்து கொடுத்தல்
- வெளிப்பாடசாலைகளுக்கு செல்லும் மாணவர்களுக்கு போதிய போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்
- உள்ளூரிலே பிரத்தியேக வகுப்புக்களை நடாத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
- ஊரில் காணப்படுகின்ற கல்வி கற்கும் வயதிலுள்ள பிள்ளைகளுக்கு கல்வியின் முக்கியத்துவத்தை எடுத்துக்கூறி கல்வியைத் தொடர்வதில் ஆர்வமூட்டும் ஊக்குவிப்பு நிகழ்ச்சிகளை நடத்தல்
- ஆப்பிரதேசங்களிலுள்ள கல்விமான்களை ஊரின் கல்வி முன்னேற்றத்திற்கு சேவை செய்யுமாறு தாண்டுதல்

**உசாத்துணைகள்**

1. றவுப் ஸய்ன் (2009) இலங்கை முஸ்லிம்களின் கல்வி சவால்களும் முன்மொழிவுகளும் Ibnu kalam Research Institution For Social Science
2. சின்னத்தம்பி,ம.(2008).பாடசாலையும் சமூகமும்.கொலும்பு:குமரன் புத்தக இல்லம்.
3. பிரதிபா.(2005).இன்றைய கல்வி எதிர்நோக்கும் சவால்கள்.இராயப் பேட்டை,சென்னை:சாரதா பதிப்பகம்.
4. மன்சூர்,எஸ்.எல்.(2015).கல்வி மீதான நம்பிக்கைகளும் புதிய இலக்குகளும்.சேமமடு:சேமமடு பதிப்பகம்.
5. சந்திர சேகரம்,சோ.(2009).சமகால கல்வி முறைகள் ஒரு விரிநிலை நோக்கு.கொழும்பு:சேமமடு பதிப்பகம்.
6. திபானரன்,ம.(2016).மலையக பாடசாலையும் மாணவர் இடைவிலகளும்.ப/கொஸ்லந்தை ஸ்ரீ கனேஷா தமிழ் மகா வித்தியாலயத்தை மையமாக கொண்ட ஆய்வு.(தென் கிழக்குப் பல்கலைக் கழகம்):.கலைக் கலாச்சார பீட ஆய்வரங்கம்.
7. ஜமீல் எஸ்.எச்.எம் (1990),முஸ்லிம் உயர்கல்விச் சிந்தனைகள், கல்முனை இஸ்லாமிய நூல் வெளியீட்டு பணியகம்.
8. இலங்கை முஸ்லிம் சமூகத்தின் கல்விப் பிரச்சினைகள் பற்றிய அறிக்கை,online available: www.lankamuslim.info/2009/12/blogpost 08htm,l [20140922]